Probate O.P.No.297/2019

**PW.2** ரவீந்திரன்

23-09-2025 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் 10 வது வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கடந்த 15 வருடங்களாக வாட்ச்மேன் வேலை செய்து வருகிறேன். எனக்கு பாப்பண்ணன் பெரியப்பா முறையாகிறார். எனது தகப்பனாரின் சகோதரர் பெரியசாமி. அவர் ஒருவர் மட்டும்தான் என் தகப்பனாரோடு உடன் பிறந்தவர். எனது தாயாரின் உடன் பிறந்த சகோதரிகள் இரண்டு பேர். எனது சித்திகளின் கணவர்களின் பெயர்கள் தன்னாசி, மற்றும் வீராசாமி ஆகும். பாப்பண்ணன் பெரியப்பா முறை என்று காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இந்த தாவா சொத்து சம்மந்தப்பட்ட வேறு ஆவணங்களிலோ, அவர்களது குடும்ப சொத்து சம்மந்தப்பட்ட வேறு ஆவணங்களிலோ நான் கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.குடும்ப நண்பர்களாக நானும், ஈஸ்வரனும் 30 வருடங்களாக இருக்கிறோம். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவேண்டுமென்று ஈஸ்வரன் எப்பொழுது என்னிடம் கேட்டார் என்றால், நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது, அதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணை வந்த பின்பு நான் ஈஸ்வரனிடம் சென்று காண்பித்தேன். எனக்கு ஏற்கனவே இந்த வழக்கு நிலுவையில் உள்ள விவரமும் தெரியும். அவரும் நீதிமன்றத்தில் வந்து

அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சி அளிக்குமாறு கூறினார், நானும் சாட்சியம் அளிக்கிறேன். பாப்பண்ணன் சொத்து சம்மந்தப்பட்ட விஷயங்களை யாருடன் கலந்து பேசுவார் என்று எனக்கு தெரியாது. பாப்பண்ணனின் வாரிசுகள் ஒற்றுமையாகதான் வாழ்ந்த வந்தார்கள். பாப்பண்ணன் எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயிலை அவர் எழுதும்பொழுது நான் உடன் இருந்து பார்த்துள்ளேன். சிங்காநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் உயில் ஏன் பதிவு செய்யப்படவில்லை என்ற விவரம் எனக்கு தெரியாது. 2019 ற்கு முன்பு உயிலை பற்றி ஈஸ்வரன் வெளி உலகத்திற்கு சொல்லாததற்கு காரணம் என்ன என்று எனக்கு தெரியாது. பாப்பண்ணன் எந்த காலகட்டத்திலும் உயிலை எழுதி வைக்கவில்லை என்றும், ஈஸ்வரனும், நானும், மற்ற சாட்சிகளும் சேர்ந்து அவர் இறந்த பின்னர் இந்த உயிலை தயாரித்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. பாப்பண்ணனுக்கு ருக்மணி என்ற மனைவியும், முனிரத்தினம், ஈஸ்வரன் என்ற மகன்களும், விமலாதேவி, பாக்கியலட்சுமி என்ற மகள்களும் இருந்தார்கள் என்றால் சரிதான். பாப்பண்ணன் உயிரோடு இருக்கும்பொழுது அவரது மனைவிக்கோ, மகள்களுக்கோ அல்லது முனிரத்தினத்திற்கோ வேறு சொத்துக்கள் கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. பாப்பண்ணனின் உறவுகள் பற்றியும், சொத்துக்களின் விவரங்கள் பற்றியும் எனக்கு தெரியும். ஆனால் சொத்து சம்மந்தமான ஆவணங்களை நான் எந்த காலகட்டத்திலும் பார்த்ததில்லை என்று சொன்னால் சரிதான். ஈஸ்வரன் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பாப்பண்ணனின் வீட்டிலிருந்து இரண்டு தெருக்கள் தள்ளி எங்கள் வீடு உள்ளது. அவர் வீட்டை கடந்துதான் நாங்கள் பேருந்து நிலையத்திற்கு செல்வோம். பாப்பண்ணன் இறந்தபொழுதும், மற்ற சடங்குகளிலும் நான் கலந்து கொண்டுள்ளேன். அப்பொழுது பாப்பண்ணனின் வாரிசுகளும் கலந்து கொண்டார்கள்.

**மறு விசாரணை** இல்லை

sd/ ரவீந்திரன்,

Taken down by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.